இணைப்பு

[682ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 561-க்கான விடையைக் காண்க].

மொழிப் பிரச்சினை.

தமிழ்நாடு, கருநாடகம், ஆந்திரப்பிரதேசம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாடு, இன்றைக்குச் செயல் படுத்தப்பட்டு வரும் மொழிக் கொள்கை குறித்து கருதிப் பார்த்து ஆங்கிலம் கூடுதல் இணை மொழியாக தொடர்ந்து இருந்துவரும் என்றும், இந்தியை ஆட்சி மொழியாக மாற்றுவதற்கான முடிவு, இந்தி பேசாத மக்களிடம் விடப்பட வேண்டுமேயல்லாமல் இந்தி பேசும் மக்களிடம் அல்ல என்று மறைந்த தலைமை அமைச்சர் பண்டிட் ஜவஹர்லால் நேருவும், இந்தி பேசாத மக்கள்மீது இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று மறைந்த தலைமை அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி முன்னாள் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி, தற்போதைய தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் ஆகியோரும் உறுதிமொழி அளித்திருந்த போதிலும் மத்திய அரசின் சில அமைச்சகங்கள் மறைமுகமாக இந்தியைத் திணிக்க முயற்சி செய்துள்ளமை கவலை தருவதாக உள்ளது என்று இம் மாநாடு கருத்து தெரிவிக்கின்றது. 1969 ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் சட்டத்தின் விதித்துறைகளுக்கு முரணாகச் செய்யப்படும் இம் முயற்சியை இம்மாநாடு வன்மையுடன் கண்டிக்கிறது. இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்படுவதை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு விரும்புவதுடன் இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க மேற்கொண்டும் முயற்சி செய்வதனால் மத்திய அரசின்மீது இந்தி பேசாத மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை குலைந்துவிடக்கூடும் என்ற அச்சத்தைத் தெரிவிக்கிறது. எனவே தலைமை அமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, இந்தியைத் திணிப்பதற்கான நடவடிக்கையை தடுப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

நடப்பாண்டு வரி வருவாய் ஒதுக்கீடுகள்.

மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரிகளில் மாநிலங்களுக்குப் பங்கிடத்தக்க அளவை 1978 மார்ச்சில் தேசிய வளர்ச்சிக்குழு தனக்கு வகுத்துக் கொடுத்துள்ள ஆய்வு வரம்பை ஒட்டி முடிவு எடுக்கும் வரையில் 75 சதவீதமாக இவ்வாண்டில் தற்காலிகமாக உயர்த்துமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதென முதலமைச்சர்கள் தீர்மானித்தனர்.

1979 மார்ச் 30]

மொழிச் சிறுபான்மையினர்.

அரசியலமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அடிப்படையில், இந்நாட்டிலுள்ள கலாச்சார, மொழிச் சிறு பான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க தேவையான நடவடிக் கைகளை மாநில அரசுகளும், மத்திய அரசும் எடுக்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

பொதுவான ஊதியக் கொள்கை.

பொதுவான ஊதியக் கொள்கை தொடர்பான பிரச்சினை களை முதலில் தென் மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர் நல அமைச்சர்கள் கூடிப்பேசி அவர்களது கருத்தை அறிந்து கொண்டு, அவை குறித்து முதல்வர்கள் அளவில் விவாதிக்க வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

கரும்பு—லெவி சர்க்கரை விலை குறித்த தீர்மானம்.

சாகுபடிக்காகும் செலவையும், ஏனைய விளைபொருள் களுக்குக் கிடைக்கிற விலைகளையும் கரும்பு பயிரிடுவோருக்கு கட்டுப்படியாகும் விலையை அளிக்க வேண்டியதன் தேவையையும் கருத்தில் கொண்டு, 8.5 சதவீதம் சர்க்கரை கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் டன் ஒன்றுக்கு 125 ரூபாய் என்று வரை யறுக்க வேண்டும் என்று பெருவாரியாகக் கரும்பு பயிரிடும் கருநாடகம், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி, ஆகிய மாநிலங்களில் முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டனர்.

வெளி சர்க்கரையின் விலை கரும்பு விலைக்கு ஏற்பவும் கரும்பிலிருந்து பெறப்படும் சர்க்கரையின் அளவுக்கு ஏற்பவும் நிர்ணயிக்கப்பட வேண்டும். விலை வீதத்தில் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபாடு இல்லாமலும், ஒரு ஏக்கர் நிலத்தில் விளைவிக்கக்கூடிய கரும்பின் மகசூலையும் சர்க்கரை கிடைப்பதை ஒட்டி கரும்பின் தரத்தையும் அதிகரிக்கப் போதிய அளவிற்கு ஊக்கம் கிடைப்பதை உறுதி செய்யும் வண்ணம், கரும்பு, வெளி சர்க்கரை ஆகியவற்றின் விலை நிர்ணயிக்க வேண்டும்.

கேரளாவைப் பொறுத்த மட்டில் தொடர்புடைய கூறுகளை மேற்கொண்டும் ஆய்வு செய்த பிறகு அம்மாநில அரசு தனிப்பட்ட முறையில் முடிவெடுக்கும்.

[1979 மார்ச் 30

கோதுமை, நெல் ஆகியவற்றிற்கு உதவித் தொகை.

நெல்லுக்கு தரப்படும் விலை, குவிண்டால் ஒன்றுக்கு 77 ரூபாயாக உள்ளது. ஆனால் கோதுமைக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 112·50 ஆக உள்ளது.

அரிசியை வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கு அரிசி விலை ஏறாத வகையில் நெல்லுக்கான கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்.

1978–79 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் உணவு தானியங்களுக்கு உதவித் தொகை வழங்கும் இனத்தில் கோதுமைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 3.19 ரூபாய் உதவித் தொகை தரப்படுகிறது. ஆனால் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 4 காசுதான் தரப்படுகிறது, என்பனவற்றை முதலமைச்சர்கள் கண்டுணர்ந்து, கோதுமைக்குத் தரப்படும் அதே உதவித் தொகை நெல்லுக்கும் கொடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்றும் இதன் மூலம் நெல் சாகுபடி செய்பவர்களுக்கு கட்டுப்படியாகும் கொள்முதல் விலை கிடைக்கச் செய்வது, அரிசியை வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கு தற்போதுள்ள விலையிலேயே அரிசியைக் கிடைக்கச் செய்வது என்ற இரண்டு நோக்கங்களும் எய்தப் பெறும் என்றும் முதலமைச்சர்கள் கருதுகின்றனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS